பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 07 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

**1.** இந்தியாவும் ஜப்பானும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளன.

**2.** தூய்மை கங்கை திட்டத்தை விரைந்து செயல்படுத்த சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைப்பு அவசியம் என்று மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

**3.** நிலக்கரி இறக்குமதி குறைந்து, உள்நாட்டு உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**4.** யுக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் **27** பேர் உயிரிழந்தனர். **90**க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**5.** உலககோப்பை கால்பந்து போட்டியில் ஆஸ்திரியாவை வென்ற ஸ்பெயின், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவும் ஜப்பானும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் ஜப்பான் பிரதமர் திருமதி **Sanae Takaichi** பங்கேற்ற ஆண்டு உச்சிமாநாட்டுக்குப் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, முக்கிய கனிமங்கள், தகவல் தொழில்நுட்பம், மருந்து, பசுமை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே கடல்சார் ஒத்துழைப்பும் அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு துறையில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காசியா உள்ளிட்ட சர்வதேச விவகாரங்களில் அமைதியை நிலைநாட்ட இரு நாடுகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் எல்லைதாண்டிய தீவிரவாதம் தொடர்பான விவகாரங்களில் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமில்லை என்று இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு ஜம்மு-கஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலுக்கு இந்த கூட்டறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தீவிரவாத முகாம்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

தூய்மை கங்கை திட்டத்தை விரைந்து செயல்படுத்த சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைப்பு அவசியம் என்று மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இது தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், கழிவுநீர் சுத்திகரிப்பு, நிலத்தடி நீர் மேலாண்மை ஆகியவை தொடர்பான செயல்பாடுகளை விரைவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தூய்மை கங்கை இயக்கத்தின்கீழ் இதுவரை 43 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 524 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவற்றில் 363 திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சூழல் சீரமைப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், இதை செயல்படுத்துவதில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் அமைப்புகள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் திரு. சி.ஆர். பாட்டீல் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நிலக்கரி இறக்குமதி குறைந்து, உள்நாட்டு உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 24 புள்ளி இரண்டு ஏழு மில்லியன் டன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு 21 புள்ளி ஒன்று மூன்று சதவீதம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது.

இது சுமார் 13 சதவீதம் குறைவு என அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், விநியோகத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக இறக்குமதி தொடர்ந்து குறைந்து வருவதாக நிலக்கரி அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான பயிலரங்கத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த பயிலரங்கில் சட்டமன்ற உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பணிகள் குறித்து விளக்கும் வகையில் பல்வேறு அமர்வுகள் இடம்பெறுகின்றன.

இதில் மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, மேற்குவங்க ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

மறைந்த ஈரான் உயர்தலைவர் அயத்துல்லா அலி கமேனியின் இறுதிச்சடங்கில் இந்தியா சார்பில் பங்கேற்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா மற்றும் பிஹார் ஆளுநர் திரு. சையத் அடா ஹஸ்னைன் இன்று தெஹ்ரான் புறப்பட்டுச் செல்கின்றனர்.

கடந்த பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி அமெரிக்கா-இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஆயத்துல்லா கமேனி உயிரிழந்தார்.

அவரது இறுதிச்சடங்கு நிகழ்வுகள் நாளை தொடங்கி வரும் 9ஆம் தேதி வரை நடைபெறும் என்று ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கூட்டுறவு வார விழா நாடு முழுவதும் வரும் 6ஆம் தேதி வரை கொண்டாடப்படும் நிலையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தமிழகத்தின் திருவள்ளூரில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயனடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Dhanasekar — 53 Sec)**

<<<<>>>>

சிறப்பாக சேவையாற்றும் ரயில்வே ஊழியர்களைப் பாராட்டி நாடு முழுவதும் சேவை விருதுகளை ரயில்வே வழங்கி வருகிறது.

இந்த விருதைப் பெற்றது தங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக தமிகத்தின் சேலம் கோட்டத்தில் விருது பெற்ற ஊழியர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

**(Voice Byte - 77 Sec)**

<<<<>>>>

அரசு நிர்வாகத்தில் மனித அறிவு, செயற்கை நுண்ணறிவை வழிநடத்துவதாக அமைய வேண்டும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மின் ஆளுகை மாநாட்டில் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தற்போது இன்றியமையாத அங்கமாக மாறியுள்ளது என்றார்.

டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் நோக்கம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதுதான் என்று அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த பாதுகாப்பான டிஜிட்டல் ஆளுகை என்ற கொள்கையில் அரசு கவனம் செலுத்தி வருவதாக திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

யுக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 27 பேர் உயிரிழந்தனர். 90க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

யுக்ரைனின் 30 இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ரஷ்யா மீது யுக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலிஃபோர்னியாவில் நடைபெற்ற இப்போட்டியில் ஆஸ்திரியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்பெயின் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

டொராண்டோவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் போர்ச்சுகல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வென்றது.

**<<<<The End>>>>**